23433



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| දෙමළ I<br>தமிழ் I<br>Tamil I | 72 T I | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே.

(அ) இச்செய்யுள் எத்துறையில் அமைந்துள்ளது என்பதை விளக்குக.

(ஆ) பாட்டுடைத் தலைவனின் கொடைச்சிறப்பு சித்திரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) அவனது வலிமை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறதென்பதை எடுத்துக்காட்டுக.

(ii) மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்
தன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்கு
அன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி னைந்துருகி நிற்பார்.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

(இ) இச்செய்யுளிற் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக. (24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

**2.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக் கிடந்தா னொரு நாளில்
கூழைப் பிசைந்தான் குடிசையிலே - அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே

நிலத்தை யுழுவான் நிலத்தினிலே - தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலப்பை யிழுக்கும் மாட்டுடனே - அவன்
காலங் கழித்தான் கண் கலங்கி

உண்பது முடுப்பதும் வயல்தனிலே - அவன்
உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே
விண்தான் தனது கூரையென - ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்

உழுபவருக்கு நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக்கிடச் சட்டங்கள்
நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்

பண்ணை முறையில் பலநூறு - வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்

காட்டை வெட்டிக் களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி - ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி

அன்னை நாட்டைக் காப்பவனே - அதைப்
பசியில் நின்று மீட்பவனே
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க

(i) இக்கவிதையில் கவிஞர் ஆண்டவனாக யாரைச் சித்திரிக்கின்றார் ? ஏன் ?

(ii) விவசாயியின் உழைப்பு, அடிமைநிலை, வறுமை என்பன சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.

(iii) விவசாயியின் முன்னேற்றத்துக்குக் கவிஞர் கூறும் வழிவகைகள் யாவை ?

(iv) கவிஞர், விளைநிலத்தைக் கோயிலாகச் சித்திரிப்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

**அல்லது**

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

(ஆ) வண்ணமலர்ச் செடிகள் மிகுதியாக வளர்ந்து நிற்கும் அந்த வீட்டுக்குள் நுழைந்த வள்ளியின் தந்தை கந்தனுக்கு அப்படிப்பட்ட ஒரு வீட்டை ஏழு தலைமுறை சென்றாலும் தனது சந்ததியால் கட்டிமுடிக்க இயலாதென்ற திடமான நம்பிக்கை அதைப் பார்த்ததும் ஏற்பட்டது. அங்குள்ள சுவர்கள் - அங்குள்ள விறாந்தைத் தரைகள் - அங்குள்ள மின்விளக்கு அலங்காரங்கள் - அங்குள்ள மீன் தொட்டிகள் யாவுமே அவனைப் பிரமிப்பிலாழ்த்தின. உண்மையிலேயே வள்ளி அதிர்ஷ்டக்காரிதான்! அவள் பிறந்த நட்சத்திரத்தை அவன் நினைத்துப் பார்த்தான். திருவோணம். ராணியாட்டம் வாழுவாள் என்று சோதிடர் சொல்லி இருக்கிறார்.

ஒரு பக்கத்தில் ஒதுங்கி, கைகட்டி எஜமானனுக்கும் அவரது மனைவிக்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்த அவனுக்கு வள்ளிக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த கிளாசில் தேநீர் வந்தது. புனிதமான கோயிலொன்றுக்குள் பிரவேசித்து, தேவி சமேதரராய் எழுந்தருளியிருக்கிற ஆண்டவன் முன்னால் பக்திப் பரவசமாக நிற்கும் ஒரு பக்தனைப் போல அவன் குரல் தளதளத்தது.

"எனது தெய்வங்களே! இதெல்லாம் என்னத்துக்கு, மூன்று நேரம் சாப்பாடு குறையாமல், வள்ளியை உங்களது சொந்தப் பிள்ளை போலப் பாக்கிறியள். அதுக்கே நாங்கள் சாகுமட்டும் ஊழியம் செய்யவேணும்... அவள் அதிர்ஷ்டம் செய்துதான் இங்கை வந்தவள். அவளை ஒருக்கா அவள் தாய் பார்க்கவேணும். கூட்டிக் கொண்டு வா எண்டு சொல்லி ஆசைப்பட்டவள்தான். ஆனா தாய்க்குத் தாயாய் என்ரை அம்மா கவனிக்கையிக்கை, அவளை என்னத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டவேணும்...? அவளின்ரை சம்பளத்தைத் தந்தால் போதும்... பிறகு - ஆறுதலாக - தாய் பார்க்கட்டும்."

சுவரின் ஒரு மூலையில் சாய்ந்து நின்ற வள்ளியின் குரல் திடிரெனத் தந்தையை நோக்கி எழுந்தது.

"ஏலாது! நான் வரப்போறன். இங்கே நிக்க மாட்டேன்."

"ஏண்டி... அங்கை வந்து வயறு காய்ஞ்சு சாகப் போறியோ ? தெய்வம் மாதிரி இந்த அம்மாவையும் ஐயாவையும் விட்டுவிட்டு வாறனெண்டு சொல்ல உனக்கு என்ன பைத்தியமே ?

"முடியாது, நான் வரப்போறன்... காய்ஞ்சு செத்தாலும் சரி, வருவேன்."

"நில்லடி... என்ரை குணம் தெரியுமே ?"

"நான் மாட்டன்! வரத்தான் போறன்"

மகளை விலக்கி வெளியே செல்ல முற்பட்ட, அவனை அவள் பின் தொடர்ந்தாள். அய்யாவும் அம்மாவும் செயலற்று நின்றனர். அவள் குரல் சீற்றமாக ஓங்கி ஒலித்தது.

"நான் மாட்டன்! வரத்தான் போறன்!"

(i) வள்ளியினது தந்தையின் அப்பாவித்தனம் வெளிப்படுமாற்றை விளக்குக.

(ii) வேலைக்காரர்களும் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்படுவது எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது ?

(iii) வள்ளியை வேலைக்கமர்த்திய வீட்டாரின் செல்வச்செழிப்பும் ஆடம்பரமும் எடுத்துக்காட்டப்படுமாற்றைத் துலக்குக.

(iv) தந்தையின் பணிவும் மகளின் துணிவும் அவர்களுடைய பேச்சுகள் மூலம் புலப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (16 புள்ளிகள்)

## பகுதி II

**3.** **வினைத்தூய்மை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,

(அ) வினைத்தூய்மையினது சிறப்பும்

(ஆ) பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யக்கூடாது என்பதும்

(இ) அதற்கான காரணமும்

வலியுறுத்தப்பட்டிருக்குமாற்றினையும்

(ஈ) அவ்வதிகாரத்தில் இடம்பெறும் உவமை எதனை உணர்த்தக் கையாளப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

4. **கைகேயி சூழ்வினைப் படலத்தில்** தசரதன் கைகேயிக்கு வரமளித்தது முதல் மகளிர் பள்ளி எழுந்தது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தசரதனின் துயரும் சினமும்

(ஆ) தசரதனது துயர்கண்டு இரங்காத கைகேயி மீது கவிஞர் கொண்ட வெறுப்புணர்ச்சி

(இ) இராமன் மீது மக்கள் கொண்ட அன்பு

(ஈ) தற்குறிப்பேற்ற அணிகள் எவையேனும் **இரண்டின்** சிறப்பு (20 புள்ளிகள்)

5. தேம்பாவணி **பைதிரம் நீங்கு படலத்தில்** மரியாள், திருமகனை எருசலேம் கோயிலில் ஒப்புக்கொடுத்தது முதல் நகரை விட்டு நீங்குவது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) எருசலேம் கோயிலின் எழில்

(ஆ) வானவன் கொண்டுவந்த சேதி கேட்டு சூசையடைந்த துயரமும் மனக் குழப்பமும்

(இ) மரியாளின் மெல்லியல்பும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவள் கொண்ட திடசங்கற்பமும்

(ஈ) இயேசுபாலனின் மகிமைகள்

(உ) உவமையணியைக் கையாள்வதில் வீரமாமுனிவரின் ஆற்றல் (20 புள்ளிகள்)

6. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் **தமிழ்ச் செல்வாக்கு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) அரசியல்

(ஆ) சமயம்

(இ) மொழி

ஆகிய துறைகளில் பிறநாடுகள்மீது தமிழகத்தின் செல்வாக்கு பரவியவாற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

7. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பயணத்தில், அம்மக்களிடத்தே,

(அ) ஒற்றுமை உணர்வு

(ஆ) சமூக அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்ட குணம்

(இ) சமூக, அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகள்

என்பன வேண்டுமென்பதை **நீண்ட பயணம்** நாவல் புலப்படுத்துமாற்றை விபரிக்குக. (20 புள்ளிகள்)

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **சிலப்பதிகாரம்** துன்பமாலையில் கணவன் அநீதியாகக் கொலையுண்டதை அறிந்த கண்ணகியின் ஆவேசம் வெளிப்படுமாறு

(ஆ) புரட்சிக்கமாலின் **என் இறைவன்** என்ற கவிதையில் வெளிப்படும் இறைவனின் வல்லமைகள்

(இ) **தாய்** சிறுகதையில் வெளிப்படும் நம்பிக்கெட்ட தாயின் அவலம்

(ஈ) **மீண்டும் தொடங்கும் மிடுக்கு** என்ற கவிதையில் பேரழிவு கண்டு தளராத விவசாயியின் ஓர்மம் வெளிப்படுமாறு (20 புள்ளிகள்)

* * *

Education கல்வி அධ්‍යාපන

kalvi.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | | |
|---|---|---|---|
| දෙමළ II<br>தமிழ் II<br>Tamil II | 72 T II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி **II** இன் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவின் **'அ'** பகுதியிலுள்ள **இருபது** வினாக்களும் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

**சுட்டெண் : ...........................**

## பகுதி I

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அரை உயிர் எழுத்துகள்
(1) ட், ண் (2) இ, எ (3) ய், வ் (4) ச், ஞ் (5) இ, உ (......)

1.2 பின்வருவனவற்றுள் ஈரிதழ் மூக்கொலி
(1) ப் (2) ம் (3) வ் (4) ங் (5) ஞ் (......)

1.3 உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் இடம்பெற்றுள்ள சொல்
(1) கொலுசு (2) நாக்கு (3) மருந்து (4) அது (5) ஆடு (......)

1.4 சொல்லின் இடையில் இரட்டித்து **வராத** எழுத்து
(1) க் (2) ம் (3) ள் (4) ப் (5) ழ் (......)

1.5 வருமொழியின் முதலில் வரும் வல்லினம் **மிகாது** புணரக்கூடிய சொல்
(1) செய்ய (2) அடங்கா (3) எந்த (4) புதிய (5) அப்படி (......)

1.6 தோன்றல் விகாரம் இடம்பெற்றுப் புணர்ந்துள்ள சொல்
(1) மக்களை (2) மண்ணால் (3) பழஞ்சோறு (4) மரவேர் (5) படங்கள் (......)

1.7 பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி இடம்பெற்ற சொல்
(1) வானொலி (2) கைவிடு (3) அமைச்சர்கள்
(4) படகோட்டிகள் (5) அமைச்சரவை (......)

1.8 பின்வருவனவற்றுள் மரியாதை ஒருமை உணர்த்தும் பெயர்
(1) இருவர் (2) மாமிமார் (3) ஒருவர் (4) ஞானி (5) ஞானியர் (......)

1.9 பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
(1) சிரிப்பு (2) சான்றோர் (3) சுடுசோறு (4) பலசாலி (5) கருணை (......)

1.10 இராமன் சீதையைக் கைப்பிடித்தான். - இவ்வாக்கியத்தில் 'கைப்பிடி' என்பது
(1) கூட்டுப்பெயர் (2) ஏவல்வினை (3) முதல்வினை
(4) துணைவினை (5) மரபுத்தொடர் (......)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

1.11 துன்ப நினைவுகளிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. - இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வேற்றுமைகளின் பொருள், முறையே

(1) நீங்கல், கருவி (2) இடம், கருவி (3) நீங்கல், கருத்தா
(4) இடம், காரணம் (5) எல்லை, காரணம் (……)

1.12 விகுதியால் காலம் உணர்த்தும் வினைச்சொல்

(1) நடந்தான் (2) செய்த (3) ஓடுவாய்
(4) ஓடுகின்றது (5) செய்யும் (……)

1.13 வைதற் பொருளில் அமைந்த வியங்கோள் வினை இடம்பெற்ற தொடர்

(1) கெடுக என் ஆயுள் (2) நின் புகழ் ஓங்குக
(3) வாழ்க வையகம் (4) இன்பம் மலர்க
(5) வையகம் துயர் தீர்க (……)

1.14 சிறிய, வண்ணவண்ண, பென்னம்பெரிய என்பன

(1) பெயரெச்சம் (2) வினையெச்சம் (3) வினையடை
(4) பெயரடை (5) அளவுப்பெயர் (……)

1.15 மலையிலிருந்து கீழே வீழ்ந்த வெண்ணிற அருவி வளைந்து நெழிந்து சலசலவென்று ஓடியது. - இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வினையடை

(1) வீழ்ந்த (2) நெழிந்து (3) சலசலவென்று
(4) வளைந்து (5) வெண்ணிற (……)

1.16 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் **குன்றா** வாக்கியம்

(1) நான் விடுமுறையின்போது ஊருக்குச் சென்றேன்.
(2) நான் நண்பனுக்குக் கடிதம் எழுதினேன்.
(3) தினமும் பாடசாலைக்கு நடந்து செல்வேன்.
(4) அப்பா அடுத்தமாதம் ஊருக்கு வருகிறார்.
(5) இன்று ஊரிலிருந்து திரும்புகிறேன். (……)

1.17 பின்வருவனவற்றுள் தனி வாக்கியம்

(1) காந்தனும் கமாலும் மிக நெருக்கமான நண்பர்கள்.
(2) நானும் கண்ணனும் பாடசாலைக்குச் சென்றோம்.
(3) காந்தன் வகுப்பறையில் அல்லது நூலகத்தில் இருப்பான்.
(4) காந்தன் பல்கலைக்கழகத்துக்கும் கமால் வேலைக்கும் சென்று வருகிறார்கள்.
(5) கமால் தான் படிக்க வேண்டும் அல்லது தொழில் பார்க்க வேண்டும் எனக் கருதினான். (……)

1.18 பின்வருவனவற்றுள் 'அல்ல' என்ற சொல்லைக் கொண்டு **எதிர்மறை** வாக்கியமாக மாற்றத்தக்கது

(1) என்னிடம் அந்தப் புத்தகம் உள்ளது.
(2) என்னிடம் அந்தப் புத்தகம் இருந்தது.
(3) நான் அந்தப் புத்தகத்தைப் படிக்கிறேன்.
(4) அவன் அந்தப் புத்தகத்தைப் படித்தால் முன்னேறுவான்.
(5) எனது அபிப்பிராயத்தின்படி அது நல்ல புத்தகம். (……)

1.19 அந்த நடுநிசியில் மனிதர் ஒருவரும் நடமாடவில்லை. - இவ் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'உம்' இடைச் சொல்லுக்குப் பதிலாக இடம்பெறத்தக்க வேறு இடைச் சொற்கள்

(1) ஏ, ஆ (2) தான், ஓ (3) மட்டும், ஏ
(4) கூட, ஆவது (5) தான், ஆல் (……)

1.20 பின்வருவனவற்றுள் 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவத்தால் இணைக்கக்கூடிய முற்று வாக்கியங்களின் தொகுதி

(1) அவன் நூலகம் செல்வான்; அவன் தேவையான புத்தகத்தைத் தேடினான்.
(2) அவன் நூலகம் சென்றான்; அவன் புத்தகம் ஒன்றை இரவல் பெற்றான்.
(3) அவள் பாடசாலை சென்றாள்; அவள் ஒழுங்காகப் படிப்பாள்.
(4) இந்தப் புத்தகம் வாசிப்பதற்கு இலகுவானது; அதை நான் இன்னும் வாசித்து முடிக்கவில்லை.
(5) அவன் தாளம் போட்டுப் பாடினான்; அவள் அந்தப் பாட்டுக்கு ஆடினாள். (……)

(20 புள்ளிகள்)

* *

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **1**ஆம் வினாவின் **'ஆ'** பிரிவுக்கும் **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. உயர்திணை வினாப்பெயருக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.
2. தொழிற்பெயர் என்றால் என்ன என்பதை விளக்கி, **ஓர்** உதாரணம் தருக.
3. 'ஓடு' என்ற வினையடியாகப் பிறந்த தன்மை ஒருமை வினைமுற்றுக்கு **ஓர்** உதாரணம் தந்து, அதன் பகுபத உறுப்புகளைப் பிரித்துக்காட்டுக.
4. 'காரணவினை' என்றால் என்ன என்பதை விளக்கி **ஓர்** உதாரணம் தருக.
5. 'தற்போது நிலவும் காணிப் பிரச்சினைக்குப் பதிலாகவே இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது' என்ற வாக்கியத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லைச் சுட்டிக்காட்டி, பொருத்தமான சொல்லைக் கொண்டு வாக்கியத்தைத் திருத்தி எழுதுக. (10 புள்ளிகள்)

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆடல் பாடலோடு வளர்ந்து வருபவன் மனிதன். மற்ற வாழ்க்கைக் கூறுகளை அறிவதற்கு முன்னே, குழந்தை ஆடியும் பாடியும் வளர்ந்து வருதல் காண்கிறோம். உலகெங்கும் உள்ள எல்லா மக்களினங்களும் மிகப் பழங்காலம் முதற்கொண்டே ஆடல் பாடல் கலைகளைப் போற்றி மகிழ்ந்து வந்துள்ளன. உழைத்துக் களைத்த களைப்பு நீங்குவதற்காகவும், உள்ளத்தில் நிரம்பிய உணர்ச்சியைப் புலப்படுத்துவதற்காகவும் பழங்கால மக்கள் ஆடலையும் பாடலையும் கையாண்டு மகிழ்ந்தனர். அவ்வாறு கையாண்ட ஆடல் பாடல்களுக்கு அடிப்படைக் காரணம் பொதுவாக இருந்தும், புலப்படுத்திய உணர்ச்சிகளும் பெற்ற பயன்களும் பொதுவாக இருப்பினும், ஆடல் பாடல்களின் அமைப்பும் வளர்ச்சியும் ஒரே தன்மையாக இல்லை. நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் ஆடல் பாடல்கள் வெவ்வேறு வடிவுகள் கொண்டு வளர்ந்து அமைந்தன. உலகத்து மக்கள் எல்லோருக்கும் பசி ஒரேவகையாக இருப்பினும், உணவு என்னும் பொதுத்தேவை ஒரேவகையாக இருப்பினும், அந்தந்த நாட்டில் கிடைக்கும் உணவுப்பொருள்களின் வேறுபாட்டால், உணவு வகைகளும் உண்ணும் முறைகளும் வெவ்வேறாக அமைந்துள்ளன அல்லவா ? அவைபோலவே, நாட்டுக்கு நாடு இனத்துக்கு இனம் தட்ப வெப்பநிலை வேறுபாடுகளாலும், பழக்க வழக்க வேறுபாடுகளாலும், மொழி நாகரிக வேறுபாடுகளாலும் ஆடல் பாடல் கலைகளும் வெவ்வேறு வகையாக வளர்ந்து அமைந்தன. தமிழ்நாட்டு இசைக் கலையிலும் நாட்டியக் கலையிலும் உள்ள சிறப்பியல்புகளுக்கு அவைகள் காரணங்கள் ஆகும். அன்றியும், பல நூற்றாண்டுகளாக--இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாக--அவை தொடர்ந்து பண்பட்டு விளங்கி வருவதால், மற்ற நாட்டுக் கலைகளுக்கு இல்லாத வரலாற்றுப் பெருமையோடு தெளிவுறத் திகழ்கின்றன. கருநாடக சங்கீதம் என்றும், பரத நாட்டியம் என்றும் அக் கலைகள் இன்றும் தனிப் பெயர்கள் பெற்றுச் சிறந்து விளங்குதல் காண்கிறோம். (10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முரண்பாடுகளின்றி எந்தவித இயக்கமும் மாற்றமும் இல்லை எனலாம். பொதுவாக நிலவுடைமைச் சமூகத்தில் இரண்டு அடிப்படை முரண்பாடுகளைக் காணலாம். ஒன்று, நிலவுடைமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு; இரண்டாவது, நிலவுடைமையாளர்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடு ஆகும். முதல்வகைப்பட்ட முரண்பாடுகள் பெரிதும் முற்றி, கலகங்களாக வெடித்த சம்பவங்களைப் பற்றி நமக்கு சரியானதும் முழுமையானதுமான ஆவணங்கள் இல்லை. எனினும் பிற்காலச் சோழர் காலத்தில் நடந்த சில விவசாயக் கலகங்களின் மூலமாக இந்த வகையான முரண்பாட்டை விளங்கிக் கொள்ளலாம்.

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

நம்மிடத்து உள்ள பதிவுசெய்யப்பட்ட வரலாறுகள் எல்லாம், இரண்டாவது வகையான முரண்பாடுகளின் தொகுப்பாகும். இம்முரண்பாட்டிற்கு சில அடிப்படைக் காரணங்கள் இருந்திருக்கும். ஒரு குறிப்பிட்ட பகுதி நிலவுடைமையாளர் குழாம், தம் பகுதி சுரண்டலின் உச்ச நிலையை அடைந்தவுடன் அல்லது அந்தப் பகுதியில் உச்ச நிலை உற்பத்தி கிட்டியவுடன் வேறு பகுதிகளை வென்றடக்க வேண்டிய அவசியம் காரணமாயிருக்கலாம்; அல்லது, உற்பத்திச் சாதனமாகிய நிலத்தை மேன்மேலும் பெருக்கிக் கொண்டே போக வேண்டும் என்னும் பொருளியல் வேட்கை காரணமாயிருக்கலாம். அல்லது, நிலவுடைமையாளர் மனதில் வேர்விட்டுப் படர்ந்திருக்கும் பரம்பரைப் பெருமை பற்றிய கருத்துகளும் காரணமாயிருக்கலாம். இவை போன்ற காரணங்களினால் கடம்பர், கேரளர், பாணர், பாண்டியர், சம்புவரையர், ஹொய்சலர் ஆகிய நாட்டு நிலவுடைமையாளர் கலகங்களினால் சோழப் பேரரசு கலகலக்க ஆரம்பித்தது. இறுதியில் பாண்டியர் கைகளில் சிற்றரசாக ஒடுங்கிவிட்டது எனலாம்.

(i) நிலவுடைமைச் சமுதாயத்திற் காணப்படும் அடிப்படை முரண்பாடுகள் எவை ?
(ii) எவ்வகை முரண்பாடுகள் பற்றிய முழுமையான ஆவணங்கள் நம்மிடம் இல்லை ?
(iii) நம்மிடம் உள்ள பதிவுசெய்யப்பட்ட வரலாறுகள் எவ்வகையான முரண்பாடுகளின் தொகுப்பாக அமைகின்றன ?
(iv) நிலவுடைமையாளர்களுக்கிடையிலான முரண்பாட்டுக்குக் காரணமாய் அமைபவை எவை ?
(v) எத்தகைய முரண்பாட்டினால் சோழப் பேரரசு வீழ்ச்சிகண்டது ? (10 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிந்து, **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) மொழியும் பண்பாடும்
(ஆ) வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு
(இ) புவி வெப்பமடைதல்: காரணங்களும் விளைவுகளும்
(ஈ) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆறுமுகநாவலரின் பங்களிப்பு
(உ) 'அறிவுடையார் எல்லாம் உடையர்' (20 புள்ளிகள்)

## பகுதி II

### பிரிவு 'அ'

**4.** (அ) பதினெண் மேற்கணக்கு நூல்களை அவற்றின் பொருள் மரபின் அடிப்படையில் வகுத்துக்காட்டுக.
(ஆ) சங்ககால அகத்திணை இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.
(இ) **நெடுநல் வாடை**யை அகத்திணை இலக்கியம் என்று கொள்ள முடியுமா ? கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

**5.** (அ) தமிழிலக்கிய வரலாற்றில் சோழப் பெருமன்னர் காலம் **காவிய காலம்** எனப்படுவதன் காரணத்தை விளக்குக.
(ஆ) பரணி இலக்கியத்தின் அமைப்பினை விளக்கி, சோழப் பெருமன்னர் காலத்தில் அப்பிரபந்தம் பெற்ற வளர்ச்சியினைத் தெளிவுவுறுத்துக.
(இ) கம்பனின் கவியாற்றல் பற்றிக் கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

**6.** (அ) ஐரோப்பியர் தொடர்பால் தமிழிலக்கியப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்டுக.
(ஆ) தமிழிலக்கிய வரலாற்றில் வீரமாமுனிவர் பெறும் இடத்தினை மதிப்பிடுக.
(இ) இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க்கவிதைப் போக்கில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்குக.
(15 புள்ளிகள்)

### பிரிவு 'ஆ'

**7.** இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எழுந்த நூல்களை மேல்வரும் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குக.
(அ) கிறிஸ்தவ சமயச் சார்பானவை
(ஆ) இந்து சமயச் சார்பானவை
(இ) பிரபுக்கள் புகழ்பாடுபவை (15 புள்ளிகள்)

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினைப்** பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
(அ) பதிப்புத்துறையில் சி. வை. தாமோதரம்பிள்ளை
(ஆ) நாடகத்துறையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
(இ) சிறுகதைத்துறையில் இலங்கையர்கோன்
(ஈ) நாவல் இலக்கியத்துறையில் சுபைர் இளங்கீரன்
(உ) கவிதைத்துறையில் நீலாவணன் (15 புள்ளிகள்)

***

kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page